**பிரதம மாவட்ட நீதி மன்றம், திருவள்ளூர்.**

இந்நீதிமன்ற உதவியாளர் நிலை -1 திரு. மோகன் அவர்களால் பிரமாணம் செய்விக்கப்பட்டு இந்திய சாட்சிய சட்டம் 1871, பிரிவு 1-ன் கீழ் மனுதாரர்/ வாதி / பிரதிவாதி தரப்பு சாட்சி 1ஆக விசாரிக்கப்பட்டு 2023-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 19-ம் நாள் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர்...................................................... | தந்தை /கணவர் பெயர்............................................ |
| கிராமம்.............................................................. | இனம்.................................................................. |
| தாலுக்கா.............................................................. | மொழி.................................................................. |
| மாவட்டம்............................................................ | தொழில்................................................................. |

---

# G.W.O.P. No. 676/2021

# 19.04.2023

**ம.த.சா.1 - திரு. அருணாச்சலம் நாகராஜன், த/பெ. நாகராஜன்**

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்</u>

**<u>முதல் விசாரணை</u>**

நான் சென்னை ஆவடியில் வசித்து வருகிறேன். நான் இந்த மனுவின் மனுதாரர். நான் மனுதாரர் தரப்பு சாட்சி 1. என் தரப்பு சாட்சியத்தை நான் நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். என் தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை நான் தாக்கல் செய்கிறேன்.

1. ஆதித்யா அருணாச்சலத்தின் பிறப்பு சான்றிதழ் ம.த.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. 30.11.2012 தேதியிட்ட எனது திருமண அழைப்பிதழ் ம.த.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. எங்களது திருமணப் புகைப்படம் (வரிசை 1) மற்றும் குறுந்தகடுடன் (வரிசை 1) ம.த.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. மைனர் ஆதித்யா அருணாச்சலத்தின் ஆதார் அடையாள அட்டையின் நகல் (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டு சரியாக இருந்ததன் பேரில் அசல் சாட்சி வசம் ஒப்படைக்கப்படுகிறது) ம.த.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. எங்களது குடும்ப அட்டையின் நகல் (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டு சரியாக இருந்ததன் பேரில் அசல் சாட்சி வசம் ஒப்படைக்கப்படுகிறது) ம.த.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. எனது ஆதார் அடையாள அட்டையின் நகல் (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டு சரியாக இருந்ததன் பேரில் அசல் சாட்சி வசம் ஒப்படைக்கப்படுகிறது) ம.த.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7. எனது வாக்காளர் அடையாள அட்டையின் நகல் (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டு சரியாக இருந்ததன் பேரில் அசல் சாட்சி வசம் ஒப்படைக்கப்படுகிறது) ம.த.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**மனுப்படி தீர்ப்பாக கேட்டுக் கொள்கிறேன்.**

**(எதிர்மனுதாரர் வழக்கறிஞரின் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).**